இருட்டுக்கடை அல்வா 20 நாட்களுக்கு பின் திறப்பு

நெல்லை, ஜூலை 16–

திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கிவந்த இருட்டுக் கடை 20 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊர் பெயரை சொல்லும் போதே அந்த ஊரின் சிறப்பான விஷயங்கள் பற்றிய ஞாபகமும் சேர்ந்து வரும். அந்த வகையில் திருநெல்வேலிக்கு அடையாளமாக இருந்தது இருட்டுக் கடை அல்வா. நெல்லைக்கு சுற்றுலா செல்பவர்கள் திருநெல்வேலி இருட்டுக்கடை அல்வா வாங்காமல் திரும்ப மாட்டார்கள்.

அந்த அளவுக்கு தமிழகம் மட்டுமின்றி உலகம் முழுவதும் இருட்டுக்கடை அல்வா புகழ் பெற்றது. இந்த நிலையில் சமீபத்தில் இருட்டுக்கடை அல்வா அதிபர் ஹரி ஹரிசிங்குக்கு திடீரென கொரோனா உறுதியான தகவல்கள் வெளிவந்தது. இதையடுத்து மன அழுத்தம் தாங்காமல் அவர் கடந்த மாதம் தற்கொலை செய்துகொண்டது மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

அதனால் அந்த கடை கடந்த 20 நாட்களாக திறக்கப்படாமல் இருந்தது. இந்நிலையில் தற்போது ஹரிசிங்கின் பேரன் குருசிங் தலைமையில் இருட்டுக்கடை நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளது. ஹரிசிங் இருந்த போது கிடைத்த வரவேற்பே அவரது பேரனுக்கும் கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இலங்கையின் 4 மீன்பிடி படகுகள் ஆந்திராவில் பறிமுதல்

ஐதராபாத், ஜூலை 16–

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றத்துக்காக இலங்கையைச் சேர்ந்த 4 மீன்பிடி படகுகள் ஆந்திராவில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஆந்திர மாநிலம் காக்கிநாடா துறைமுகத்திலிருந்து 180 நாட்டிக்கல் மைல் தொலைவில் வங்காள விரிகுடாவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இலங்கையை சேர்ந்த 4 மீன்பிடி படகுகளை கடலோர காவல்படையினர் கைப்பற்றி பறிமுதல் செய்தனர்.

அவற்றில் ஒரு படகில் இருந்த சுமார் 40 கிலோ டூனா வகை மீன்களையும், அதில் இருந்த இலங்கையை சேர்ந்த 6 மீனவர்களையும் மெரைன் போலீசாரிடம் கடலோர காவல் படையினர் ஒப்படைத்தனர். மேலும் அவர்களை கைது செய்த மெரைன் போலீசார், கைப்பற்றப்பட்ட மீன்களை ஏலம் விட்டனர்.

மீனவர்களிடம் போலீசார் நடத்திய விசாரணையில் விலை அதிகமுள்ள டூனா வகை மீன்களை பிடிப்பதற்காக எல்லை தாண்டி மீன் வந்து மீன்பிடித்ததாக அவர்கள் கூறினர்.

மற்ற 3 படகுகளில் இருந்த இலங்கையை சேர்ந்த மீனவர்கள் 20 பேரிடம் விசாரணை நடத்தி வரும் கடலோர காவல்படையினர் அவர்களை விரைவில் போலீசாரிடம் ஒப்படைப்பார்கள் என்று தெரியவந்துள்ளது.

பிளாஸ்மா தானம் அளிப்போருக்கு கர்நாடகாவில் ரூ.5000 ஊக்கத்தொகை

பெங்களூரு, ஜூலை 16–

கொரோனா நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் மருத்துவர்கள் பிளாஸ்மா சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்நிலையில் கர்நாடகாவிலும் பிளாஸ்மா சிகிச்சை முறையை அதிகரிக்கும் வகையில் அம்மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கர்நாடக அமைச்சர் சுதாகர் கூறுகையில், "கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டு வந்தவர்கள் பிளாஸ்மா தானம் அளிப்பதை ஊக்குவிக்கும் வகையில், தானம் அளிப்பவர்களுக்கு ரூ.5,000 ஊக்கத்தொகை வழங்கப்படும்" என்று அறிவித்துள்ளார்.

மேலும் அவர், வீடு வீடாகச் சென்று மக்களுக்குப் பரிசோதனை செய்து காய்ச்சல் மற்றும் அறிகுறி இருப்பவர்களை மருத்துவமனைக்கு அனுப்பும் முகாம்கள் அமைக்கப்படவுள்ளது என்றும், தொற்று பாதிப்பு உள்ளவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களை கண்டறியும் பணியும் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

சென்னையில் கொரோனா பாதிப்பு குறைந்து, குணமடைவோர் அதிகரிப்பு

மற்ற பகுதிகளிலும் தீவிர நடவடிக்கை எடுக்க அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 16–

சென்னை மாநகராட்சியின் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளின் காரணமாக கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பு குறைந்து, குணமடைவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமையில் தலைமை செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கூறியதாவது:– சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த பொதுமக்களுக்கு காய்ச்சல், சளி, இருமல் போன்ற அறிகுறிகள் உள்ளனவா எனக் கண்டறிய இல்லங்களுக்கே சென்று கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள 12 ஆயிரம் களப்பணியாளர்கள் மற்றும் நாள்தோறும் 500க்கும் மேற்பட்ட காய்ச்சல் முகாம்களை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடத்தி அறிகுறி உள்ளவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 8.5.2020 முதல் 14.7.2020 வரை 15 மண்டலங்களிலும் 17,134 காய்ச்சல் கண்டறியும் மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளன. இம்முகாம்களில் 10 லட்சத்து 65 ஆயிரத்து 981 நபர்கள் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். இவர்களில் காய்ச்சல், இருமல் மற்றும் சளி போன்ற அறிகுறிகளுடன் இருந்த 50 ஆயிரத்து 599 நபர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 12 ஆயிரத்து 237 நபர்களுக்கு தொற்று கண்டறியப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

படிப்படியாக குறைகிறது

சென்னை மாநகராட்சியில் நாள்தோறும் சராசரியாக 10 ஆயிரத்துக்கும் மேல் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படு கின்றன. இதுபோன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக சென்னையில் வைரஸ் தொற்று நாள்தோறும் படிப்படியாக குறைந்து வருகிறது.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொற்று பாதித்த நபர்களின் எண்ணிக்கை சராசரியாக 1,200 என்ற நிலையில் குறைந்துள்ளது. மேலும் சிகிச்சையிலிருந்து குணமடைந்து வீடு திரும்புவோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. உதாரணமாக சென்னையில் 14.7.2020 அன்று மட்டும் 1,858 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 1,078 நபர்களுக்கு தொற்று கண்டறியப்பட்டள்ளது.

முற்றிலும் கட்டுப்படுத்த...

இதேபோன்று பிற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிதல், காய்ச்சல் முகாம்கள் நடத்துதல், தனிமைப்படுத்தும் மையங்களை அமைத்தல், பல்வேறு விளம்பரப் பணிகளின் மூலமாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பாதுகாப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தி கொரோனா வைரஸ் தொற்றை தமிழகத்தின் பிற பகுதிகளில் முற்றிலும் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், அமைச்சர் கூட்டத்தில் கலந்து கொண்ட நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளிடம் அவரவர் துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளின் செயல்பாடுகள் குறித்து விரிவாக கேட்டறிந்தார். தொடர்ந்து, சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால்வாய்களில் தூர்வாரும் பணிகள், சிறு பழுதுகளை சரிபார்த்தல், சாலைப்பணிகள், பேருந்து தட சாலைகளை மேம்படுத்தும் பணிகள், குளங்கள் பராமரிப்பு பணிகளின் நிலைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் சார்பில் சீர்மிகு நகரத் திட்டம், அம்ரூத் திட்டத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய பணிகளின் விவரம் குறித்தும், 2020–21 ஆண்டு தமிழ்நாடு நகர சாலை உள்கட்டமைப்பு நிதி திட்டத்தில் ரூ.850 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரிய விவரம், 2020–21 ஆண்டு IUDM திட்டத்தில் ரூ.450 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய விவரம் குறித்தும், ஸ்மார்ட் சிட்டியில் விடுபட்ட திட்டப்பணிகளுக்கான மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய விவரங்கள் குறித்தும், பேரூராட்சிகளின் இயக்ககத்தின் சார்பில் குடிநீர், சாலைப்பணிகள், தெரு விளக்குகள், அனைவருக்கும் வீடுகள் போன்ற பணிகளின் நிலை குறித்து கேட்டறிந்து, ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ள பணிகள், ஒப்பந்தப்புள்ளி வழங்க உள்ள பணிகள் குறித்து கேட்டறிந்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

குடிநீர் நிலவரம்

ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் கண்டலேறு அணையில் இருந்து 8 டிஎம்சி குடிநீர் பெற விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளவும், சென்னை தவிர்த்து மாநிலத்தின் பிற பகுதிகளில் கூட்டு குடிநீர் திட்டத்தின் நிலை, கூட்டு குடிநீர் திட்டங்களில் உள்ள கடைக்கோடி கிராமங்களுக்கு போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

பணிகள் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை அதற்கான காலக்கெடுவிற்குள் முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். செயல்படுத்தப்பட வேண்டிய திட்டப்பணிகளுக்கு தேவையான திட்ட அறிக்கை தயாரித்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒப்பந்தங்களை இறுதி செய்து பணிகளை துவங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார்.

கிராம சாலைத் திட்டம்

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் கிராமப்புற பகுதிகளில் பிரதம மந்திரி கிராம சாலைத்திட்டம் 3 (2019 –20) பகுதி I கீழ் தமிழ்நாட்டில் உள்ள 15 மாவட்டங்களில் 1,044 கிலோ மீட்டர் நீளமுள்ள 299 சாலைப் பணிகள் ரூ.553.07 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன. இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவுற்று சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளுக்கு ஜூலை மாதத்திற்குள் பணிகளை தொடங்க பணி உத்தரவு வழங்க வேண்டும் எனவும், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் 3 (2020 – 21) பகுதி 1 கீழ் 29 மாவட்டங்களில் 2,157 கிலோ மீட்டர் நீளமுள்ள 583 சாலைப் பணிகளை மேற்கொள்ள ரூ.1,282 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், 2019 –20ம் ஆண்டு பிரதம மந்திரி கிராம சாலை திட்ட ஊக்க நிதியிலிருந்து 32 மாவட்டங்களில் ஐந்து ஆண்டு காலம் தொடர் பராமரிப்பு முடிவுற்ற 624 கிலோ மீட்டர் நீளமுள்ள 336 சாலைகளின் காலமுறை பராமரிப்பு பணிகள் ரூ.66.78 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவுற்று சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளுக்கான பணி ஆணை ஆகஸ்ட் மாதத்திற்குள் வழங்கவேண்டும்.

நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி வளர்ச்சி நிதியிலிருந்து 22 மாவட்டங்களில் 506 கிலோ மீட்டர் நீளமுள்ள 261 சாலைகள் ரூ.146.16 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் (திருநெல்வேலி நீங்கலாக) பணி உத்தரவு ஆணை வழங்கப்பட்டு, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

விரைந்து முடியுங்கள்

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் 2020–21 திட்டத்தின்கீழ் 29 மாவட்டங்களில் 858 பணிகள் ரூ.250 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது . இதற்கான பணி ஜூலை மாத இறுதிக்குள் வழங்க வேண்டும் எனவும், மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பசுமை வீடு திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் ஆகியவற்றின் நிலை குறித்தும், குளங்கள் மற்றும் குட்டைகளில் தூர்வாரும் பணிகள், வரத்து கால்வாய்களை பராமரித்தல் குறித்தும் கேட்டறிந்து பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் வங்கி கடன் இணைப்பு, சுயஉதவிக் குழுக்களுக்கு சிறப்பு கடனுதவி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் சுழல் நிதி, இளைஞர்களுக்கு சுய தொழில் தொடங்கிட வங்கிகளில் கடனுதவி ஆகிய கடனுதவிகளை வழங்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர்எஸ்.பி.வேலுமணி உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ஹன்ஸ்ராஜ் வர்மா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ஹர்மந்தர் சிங், சென்னை மாநகராட்சி ஆணையாளர் கோ.பிரகாஷ், நகராட்சி நிர்வாக ஆணையர் கா.பாஸ்கரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மேலாண்மை இயக்குநர் த.ந.ஹரிஹரன்,

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் சி.என். மகேஸ்வரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் கே.எஸ். பழனிச்சாமி, மாநகராட்சி இணை ஆணையாளர் (சுகாதாரம்) பி.மதுசூதன் ரெட்டி, துணை ஆணையாளர் (பணிகள்) பி.குமாரவேல் பாண்டியன், குடிநீர் வாரிய செயல் இயக்குநர் த.பிரபுசங்கர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் ஜெ.யு.சந்திரகலா உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பா.ம.க. 32–வது ஆண்டுவிழா: ராமதாசுக்கு எடப்பாடி வாழ்த்து

சென்னை, ஜூலை 16–

பா.ம.க. துவங்கி 32–வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளதை அடுத்து அந்த கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று (15–ந் தேதி) பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச. ராமதாஸை கைப்பேசியில் தொடர்பு கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியை நிறுவி 31 ஆண்டுகள் நிறைவடைந்து, இன்று (16–ந் தேதி) 32–ம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி தனது வாழ்த்தினை தெரிவித்தார். அதற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி கூறினார்.

பொன்னையன் தலைமையில் வேளாண் பதனீட்டு தொழில் கருத்தரங்கு

சென்னை, ஜூலை 16–

வேளாண் தொழில்முனைவோர், பண்ணை மற்றும் பண்ணைசாரா வேலைவாய்ப்புகளை ஒருங்கிணைத்து மதிப்புக் கூட்டுதல் மற்றும் வேளாண் பதனீட்டு தொழில் முனைவு" குறித்த கருத்தாய்வுக் கூட்டம் காணொலி வாயிலான பங்கேற்பு முறையுடன் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் துணைத் தலைவர் சி.பொன்னையன் தலைமையில் சென்னையில் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு உறுப்பினர்–செயலர் அனில் மேஷ்ராம், துறைசார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் துறைசார் வல்லுனர்கள் கலந்து கொண்டனர்.

விவசாயம் மற்றும் அதன் தொடர்புடையதுறைகளில் சொந்தமாக தொழில் தொடங்குவதற்கும், தொழில் பல்வகைப்படுத்துதல் மூலம் விவசாயிகளுக்கும் கிராமப்புற இளைஞர்களுக்கும் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருமானத்தை ஈட்டுவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்வதே இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம் ஆகும். வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் ஆகியவற்றுக்கு தீர்வுகாண, தேசிய மற்றும் மாநில அரசுகளில் முக்கிய கவனத்தில், வேளாண் துறையில் தொழில் முனைவு நிறுவனங்கள் மற்றும் குறிப்பாக வேளாண் பதனீட்டு துறையில் மதிப்பு கூட்டு முறையிலான நிறுவனங்கள் விளங்குகிறது.

வேளாண் மற்றும் வேளாண் பதனீட்டு தொழில்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள் குறித்து இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

சாத்தான்குளம் சம்பவம்: 5 போலீசாரிடம் சிபிஐ போலீசார் துருவிதுருவி விசாரணை

சாத்தான்குளம், ஜூலை 16–

தந்தை, மகன் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக மதுரையில் சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் உட்பட 5 பேரிடம் சிபிஐ போலீசார் துருவிதுருவி விசாரணை நடத்தினார்கள்.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தில் ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் உயிரிழந்த விவகாரத்தில் சாத்தான்குளம் காவல் நிலைய ஆய்வாளர் ஸ்ரீதர், எஸ்ஐக்கள் ரகுகணேஷ், பாலகிருஷ்ணன், பால்துரை, காவலர்கள் என, 10 பேர் கைது செய்யப்பட்டு மதுரையில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவ்வழக்கை சிபிஐ விசாரிக்கும் நிலையில், ஆய்வாளர் ஸ்ரீதர், எஸ்ஐக்கள் ரகுகணேஷ், பாலகிருஷ்ணன், காவலர்கள் முருகன், முத்துராஜ் ஆகியோரை 3 நாள் போலீஸ் காவலில் எடுத்து சிபிஐ விசாரித்தது.

மதுரை ஆத்திகுளத்திலுள்ள சிஐபி அலுவலகத்தில் கூடுதல் டிஎஸ்பி சுக்லா தலைமையிலான குழுவினர் விசாரித்தனர். பின்னர் அவர்களை சம்பவ இடத்திற்கு நேற்று முன்தினம் காரில் அழைத்துச் சென்று விசாரித்து, பல்வேறு தகவல்களை சேகரித்தனர்.

இருவரும் எவ்வாறு தாக்கப்பட்டனர் என்பதை காட்சி வடிவில் நடிக்கச் செய்தும் விசாரித்தனர். நேற்று இரவு அவர்கள் மதுரைக்கு அழைத்து வரப்பட்டனர். ஆய்வாளர் ஸ்ரீதர் உள்ளிட்ட 5 பேரிடமும் தந்தை, மகனை இறக்கும் வகையில் தாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதா? இதில் வேறு எதுவும் வலுவான காரணம் உண்டா? அரசியல் பின்னணி உள்ளதா? போன்ற பல்வேறு கோணங்களில் தனித் தனியே துருவி, துருவி விசாரித்தனர்.

இந்த விசாரணையில் அவர்கள் பல்வேறு தகவல்களைத் தெரிவித்துள்ளனர். கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அவர்களிடம் தனித் தனியாக எழுத்துப் பூர்வமான வாக்குமூலமும் பெற்றதாக சிபிஐ தரப்பில் கூறப்படுகிறது.

இன்று மாலை மதுரை அரசு மருத்துவமனையில் 5 பேரும் பரிசோதனைக்கு உட்படுத்தியபின், மதுரை முதன்மை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி மீண்டும் மதுரை சிறையில் அடைக்கப்பட உள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து இவ்வழக்கில் மேலும் கைது செய்யப்பட்ட சிறப்பு எஸ்ஐ பால்துரை உட்பட 5 காவலர்களையும் விரைவில் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க, சிபிஐ நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

இதற்கிடையில், தந்தை, மகன் கைதான அன்று(ஜூன்19) சிறையில் அடைப்பதற்கு முன்பு, மருத்துவச் சான்றிதழ் வழங்கிய சாத்தான்குளம் பெண் மருத்துவர், கோவில்பட்டி சிறைக்குச் சென்று சிகிச்சை அளித்த அரசு மருத்துவரிடமும் சிபிஐ விசாரிக்கிறது.

ENROLMENT NOTICE

S.Mahendran, S/o.P.K.Srinivasan, Aged about 33years,No.37,Bharani D.A.E Township Anupuram-603127 Chengalpattu dist, Intend having my Enrollment as an Advocate moved before the Bar Council Of Tamilnadu, Bar Council Buildings High Court Campus, Chennai -104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

S.Mahendran

SAD DEMISE

Inna lillahi VA inna ilaihi rajiun

HAJI S.A. AZEEZ

President of South India Iron & Hardware Merchants' Association & Partner of Sadak Steel Corporation.

PASSED AWAY on 15.07.2020

Deeply mourned by : **Dr. SUNIL PATODIA**

Chairman, S.S.P. Industries Pvt. Ltd.

Regd Office: Old No.47, New No. 95

1st Floor, Iyyappa Chetty Street, Chennai - 600 001.

சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்

CIN : L25199TN1989PLC017137

பதிவு அலுவலகம்: B11/W, சிப்காட் தொழிற்பேட்டை வளாகம், கும்மிடிப்பூண்டி– 601 201.

கார்ப்பரேட் அலுவலகம்: எண். 66 நியூ ஆவடி ரோடு 2வது தளம், எஸ்2 குறிஞ்சி அபார்ட்மெண்ட்ஸ், சென்னை 600 010. Tel: +91 44 2660 1313

Email: southernlatexltd@yahoo.com, Website: www.southernlatex.in

செய்தித்தாள் வெளியீடு நோக்கத்திற்கான வடிவம் (தனியானது/ஒருங்கிணைந்தது) (செபி (எல்டிஓஆர்) விதிகள், 2015, விதி 47(1)(பி)ஐ பார்க்கவும்) ரூ. லட்சத்தில்

வ. எண்.	விவரங்கள்	முடிந்த காலாண்டு/ முடிந்த நடப்பு ஆண்டு 31.03.2020	இன்றை தேதி வரையிலான கணக்குகள்/ கடந்த ஆண்டு 31.03.2019	முடிந்த காலாண்டு 31.03.2020	முடிந்த காலாண்டு 31.03.2019
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (இதர வருமானத்தையும் உள்ளடக்கியது)	49.36	46.46	34.04	34.04
2.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)(வரி, விலக்கு மற்றும்/ அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	23.21	23.16	22.48	22.30
3.	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	23.21	23.16	22.48	22.30
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	18.74	18.63	18.01	17.77
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது)	18.74	18.63	18.01	17.77
6.	சமபங்கு மூலதனம்	735.92	735.92	735.92	735.92
7.	கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் கொடுக்கப்பட்டுள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலான ரிசர்வுகள்)	(167.95)	(186.69)	(167.95)	(186.69)
8.	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடரும் மற்றும் தொடராதவை) 1. அடிப்படை 2. பலமிழந்தது	0.255 0.255	0.253 0.253	0.245 0.245	0.241 0.241

குறிப்பு:

a) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு /வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் மற்றும் கம்பெனியின் இணையதளம் www.southernlatex.inல் உள்ளது.

b) விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள், இந்த்ஏஎஸ் விதிகள்/ஏஎஸ் விதிகளின்படி, எது பொருந்துமோ அதற்கேற்ப லாபம் மற்றும் நஷ்ட அறிக்கையில் சரி செய்யப்பட்டுள்ளது.

c) கம்பெனியின் செயல்பாடுகள் ஒரு பகுதியான தேங்காய் நார் விற்பனையில் மட்டுமே உள்ளது.

d) மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு 15.07.2020 அன்று நடந்த இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த நிதி முடிவுகள் குறித்து சட்ட தணிக்கையாளர்கள் தங்களது திருத்தப்படாத கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

f) எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கடந்த ஆண்டு கணக்குகள் மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.

பொது அறிவிப்பு

பொது மக்களுக்கு இந்த அறிவிப்பு மூலம் தெரிவிப்பது என்னவென்றால் எனக்கு சொந்தமான மதுரை வடக்கு கூட்டு துணை பதிவாளரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 1998 ஆம் ஆண்டின் 25.05.1998 தேதியிட்ட ஆவண எண்.935, எனது அசல் விற்பனை பத்திரம் தொலைந்து மற்றும் தவறுதலாக வைத்து விட்டேன். மேற்படி பத்திரம் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. மேற்படி பத்திரத்தை யாருக்கேனும் தகவல் தெரிந்தால் கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ள வேண்டுகிறேன். இந்த அறிவிப்பு வெளியிட்ட 10 தினங்களுக்குள் எந்த உரிமை கோரல் அல்லது கோரிக்கை இல்லை எனில் யாரும் உரிமை கொண்டாட முடியாது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

K.சந்தானம்

4 வது மெயின் ரோடு,

காந்திநகர், அடையார்,

சென்னை-20

Ph: 044-22521296 / 25520286

தேதி: 16.07.2020

மேன்மைமிகு உட்கோட்ட நிர்வாக நடுவர்/சார் ஆட்சியர், திண்டிவனம்

இறப்பு சி.ப.வ.எண் : அ4/329/2018

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், இரட்டணை கிராமம், மீனவர் தெருவில் வசிக்கும் கிருஷ்ணக்கவுண்டர் மனைவி சகுந்தலா ... மனுதாரர்

பொது அறிவிப்பு

மனுதாரராகிய நான் எனது தாயார் பெரியாயி க/பெ.குப்புசாமி என்பவர் திண்டிவனம் வட்டம், இரட்டணை கிராமத்தில் உள்ள எங்கள் வீட்டில் 17.05.2005ம் தேதியில் இறந்தார் என்பதையும், மேற்படியாரின் இறப்பை எங்களின் கவனக்குறைவின் காரணமாக பதிவு செய்ய தவறிவிட்டோம். தற்போது பெரியாயி இறப்புச் சான்றிதழ் வாரிசு சான்று மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்ய தாயார் பெரியாயி என்பவரின் இறப்பு சான்று வேண்டி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினத்திற்குள் இந்நீதிமன்றத்தில் எழுத்துமூலமோ, நேரிலோ ஆஜராகி ஆட்பேனை தெரிவிக்கலாம். தவறினால் இம